DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 2178/2015 |
| Depostition of witness for | Prosecution wit. PW.2 |
| Name | **சொர்ணவேல்** |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 11-08-2022

<u>முதல்விசாரணை</u>

நான் வல்லநாட்டில் குடியிருந்து தவுல் வித்துவான் ஆவேன். நான் எனது அக்கா மாப்பிள்ளை இறந்து போனது சம்மந்தமாக இறப்பு வீட்டுக்கு செல்லும் போது 02.08.2015 ம் தேதி காலை 10.30 மணிக்கு மேல் தென்திருப்பேரை அருகே அரசுப் பேருந்தில் நான் சென்று கொண்டு இருந்த போது அரசுப் பேருந்து தெற்கு பார்த்து சென்று கொண்டு இருந்த போது வலது பக்கமாக உள்ள வயல்காட்டிற்குள் பேருந்து சென்று விட்டது. சம்பவ இடம் செங்கல்சூளை அருகே நடந்தது. விபத்தின் காரணமாக தலை எனக்கு சுற்றியது. விபத்தின் காரணமாக சுமார் 2 க்கும் மேற்பட்டவர்களுக்கு காயம் ஏற்பட்டது. அடிப்பட்ட என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொன்டு சென்று உள்நோயாளியாக 2 நாட்கள் சேர்ந்தேன். விபத்து ஏற்படுத்திய அரசுப்பேருந்து ஓட்டுநரை நான் பார்க்க வில்லை. விபத்தின் காரணமாக

எனக்கு வலது பக்க புஜத்தில் அடிபட்டது. விபத்து அரசுப்பேருந்தை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் தவறால் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

நான் தான் பேருந்தில் பயணம் செய்தேன் என்று காட்டுவதற்கு டிக்கெட் என்னிடம் உள்ளதா என்றால் தேடித்தான் பார்க்க வேண்டும். ரொம்ப நாட்கள் வைத்து இருந்தேன். போலீசாரிடம் டிக்கெட்டை காட்டினேனா என்றால் காட்டினேனா என்று நினைவில் இல்லை புஜத்தில் அடிப்பட்டதற்காக எடுக்கப்பட்ட நுன்கதிர் படத்தை போலீசாரிடம் கொடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை செய்ததற்கு அறிக்கை எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் என்னிடம் உள்ளது. சம்பவம் நடந்தது எங்கு என்றால் தென்திருப்பேரை Turning முன்பாக நடந்தது. சம்பவம் நடந்தது முத்து கிருஷ்ணாபுரம் என்றால் நான் அந்த பகுதிக்கு அடிக்கடி செல்லாததால் எனக்கு நினைவில் இல்லை. நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் தனிப்பட்ட முறையில் போலீசாரிடம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் போலீசாரே எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். புகார் கொடுத்ததாக சொல்லவதும் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்வதும் பொய் என்றும், வேறு எங்கோ காயம் ஏற்பட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.